[24th July 1957

SRI K. VINAYAKAM : Under the scheme of austerity drive, which is of course good for the country, I find even the National Flag on the Ministers' cars, which used to fly previously, have now disappeared. Do not the Government realize that there is difference between a Minister and an ordinary person? When a Minister goes to a public meeting or some other place, the people are not able to find out who is the Minister as there is no National Flag in the cars used by them. Will the Government restore the flying of the National Flag on the cars used by the Ministers so as to distinguish their cars from the ones used by a member of the public as, after all, the National Flag is not going to cost much and will not be to the detriment of the finances of the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I don't think in pursuance of the austerity drive the National Flags have been dispensed with. I may tell the hon. Member that almost all the Ministers' cars have National Flags. I think it is only Mr. Venkataraman who is not having the flag and he is very well known in the City.

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, சிறிய கார் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது கோவிந்தசாமிக்கு கண்ணை உறுத்துகிறதா என்று முன்பு கேட்டார்கள். நான் அதற்காக சொல்லவில்லை. சிக்கனத்தை அடிப்படையாக வைத்துத்தான் கேட்டேன். 50,000 மைல் போன பிறகு மாற்றம் செய்யவேண்டியதில்லையல்லவா என்று தான் கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 50,000 மைல் என்று கணக்கு வைத்திருக்கிறதே தவிர இப்போது ஓடுவது ஒரு லட்சம் மைல் வரையிலும் ஓடுகிறது. அதன் பின் தான் மாற்றப்படுகிறது. 50,000 மைல் ஓடின உடன் மாற்றம் செய்யவேண்டும் என்பதல்ல.

Public meeting places in the City

* 214 *Q.*—SRI S. PAKKIRISWAMY PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have banned the use of the Corporation open maidans, such as Conran Smith Nagar Maidan and Napier Park Maidan, in the City of Madras for public meetings of political parties; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. PAKKIRISWAMY PILLAI : கான்ரான் ஸ்மித் நகர் மைதானத்தையும் நேப்பியர் பார்க் மைதானத்தையும் சாதாரணமாக சிம்ஸன் கம்பெனி தொழிலாளர்களும் பி. அன்ட் ஸி. தொழிலாளர்களும் பொதுக் கூட்டங்களுக்கு வேண்டி உபயோகித்து வருகிறார்கள். கொஞ்ச காலம் முன் வரையில் போலீஸ் அதிகாரியிடமிருந்து மாத்திரம் உத்தரவு வாங்கினால் போதும் என்று இருந்தது. இப்போது கார்ப்பரேஷன் கமிஷனரிடமும் கலெக்டரிடமும் உத்தரவு வாங்க வேண்டும் என்று நிர்பந்தம் இருக்கிறது. இதற்கு காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு நிர்ப்பந்திப்பதற்கு காரணம் அந்த இடங்கள் எல்லாம் நகரசபையின் பரிபாலனத்தின் கீழ் இருக்கிறது. இதிலுள்ள நிலம் சர்க்காரால் கொடுக்கப்பட்டது. அந்த

24th July 1957]

முறையில் அந்த அதிகாரம் கலெக்டர் அவர்களிடம் இருக்கிறது. அதனால் இதை உபயோகிப்பதற்கு கலெக்டர் அவர்களுடைய அங்கீகாரம் வேண்டியிருக்கிறது.

Sri S. PAKKIRISWAMY PILLAI : சில வருஷங்களாக உபயோகித்து வந்த பல மைதானங்கள் வெட்ட வெளியாக கிடப்பதால் அதை உபயோகித்துக் கொள்ளுவதில் சர்க்காருக்கு ஏதாவது தடையிருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதில் தடையொன்றுமில்லை. இதை நடை முறையில் பரிபாலிப்பதற்காகத்தான் இவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN : பேச்சுரிமைக்காக வேண்டி மிக பெரிய போராட்டங்கள் நடத்தி லட்சக்கணக்காக மக்கள் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள். இந்த நிலைமையில் பொதுக் கூட்டங்கள் போடுவதற்கும் ஒலி பெருக்கி வைப்பதற்கும் அனுமதி பெற ரொம்பவும் கஷ்டமாய் இருக்கிறது. ஆகவே இதில் கட்சி வித்தியாசம் இல்லாமல் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு வேண்டிய உரிமையை சர்க்கார் கொடுக்க முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதில் கட்சி வித்தியாசம் ஒன்றுமில்லை. எல்லோருடைய பேச்சுரிமையும் கவனிக்கப்பட்டு வருகிறது. இதற்காக மற்ற உரிமைகளும் பாதிக்க வேண்டும் என்பது இல்லை.

Sri A. A. RASHEED : It is not a nuisance to hold public meetings near residential quarters ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The hon. Member may wait for my answer to the next question in which a list of places where public meetings are permitted to be held has been furnished.

Sri A. GOVINDASAMY : ஐலண்ட் கிரௌண்டில் பிரதம மந்திரி நேரு வந்திருந்த பொழுது கூட்டத்திற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அது மாதிரி மற்ற கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்த கேட்டால் அனுமதி கொடுக்கப்படுமா ?

Mr. SPEAKER : It comes only under the next question.

Sri A. GOVINDASAMY : I think we are in question No. 215, Sir.

Mr. SPEAKER : No. We are in question No. 214. The hon. Member may put his supplementary question when we take up the next question.

Sri K. VINAYAKAM : Sir, we understand that reasonable restrictions will have to be placed in the matter of holding public meetings. But, what is the object of insisting upon getting the consent from the Collector of Madras and the Corporation authorities? Is it because they happen to be the proprietors of these lands? Will the Government remove such kind of restrictions and leave the matter as it was under the old system?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no question of proprietorship in this matter. But, since it is under the administrative control of the Corporation, it is possible the Corporation might have fixed it for some other use at the same time. Therefore, it is considered necessary that previous permission of the Corporation should be obtained.